1982 மார்ச் 5]

பாய்வு செய்து அவர்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு உதவி செய்யும் நிலை அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் பட்டியல் என்று வருகின்றபோது சமுதாயத்தில் பின் தங்கியவர்கள், கல்வியில் பின்தங்கியவர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் என்கிற முறையில் அவர்களைச் சேர்த்து இருக்கிறார்கள். இந்த வேறுபாடுகள் நாளடைவில் மாறி, பொருளாதாரத்தில் மட்டும் யார் யார் பின் தங்கியிருக்கிறார்களோ அவர்களை அந்தப் பட்டியலில் வைத்து, அந்தச் சலுகைகளை அளிக்க வேண்டும் என்பது இறுதி முடிவாக இருக்கக்கூடும். அந்த முடிவை நாம் எட்டுகின்ற வரையில் இந்தச் சலுகைகளை சமூகத்தில் பின்தங்கியவர்களாக இருப்பவர்களுக்கு நாம் அளிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருப்பவர்களுக்கும்—குறிப்பாக இந்த அளவிற்குக் கீழே வருமானம் பெறுபவர்களுக்கு வேறு வகையில் அரசு ஸ்காலர்ஷிப்புகள் போன்ற சலுகைகள் மூலம் உதவிகளைச் செய்து வருகிறோம். இந்த பிற்பட்டோருக்கு அளிக்கப்படுகின்ற அத்தனை சலுகைகளையும் எல்லோருக்கும் தரும் நிலைமை இல்லை. அந்தப் பட்டியலில் யார் யார் சேர்க்கப்பட்டு இருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே அந்தச் சலுகைகள் தரப்படுகின்றன.

காரைப்பட்டி கிராமத்திலுள்ள குளத்தில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு.

*வினா எண். 364. திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுகா காரைப்பட்டி கிராமத்தில் ஊருக்கு கிழக்கே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு குளத்தை தூர்த்து தனியார் ஒருவர் ஆக்ரமித்து தென்னம்பிள்ளை வளர்ப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதனை நிவர்த்திக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) & (ஆ) துணைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு நடந்து இருக்கிறது. ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் மணப்பாறை வட்டாட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. மே. அ. இராசகுமார் : துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பெற்ற பின் அந்த இடத்தை பொதுமக்களின் நலன் கருதி, பஞ்சாயத்திடம் ஒப்படைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு அகற்றப்பெற்ற பிறகு, அந்த நிலம் யாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகிறார்களோ, அதற்கேற்றவகையில் வருவாய்த் துறை அதிகாரிகளைக் கலந்துகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு நடந்துள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அது குளம் புறம்போக்கு என்று இருக்கிறது. அது எவ்வளவு ஏக்கர் ? அதிலே தென்னம்பிள்ளை போட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, எத்தனை தென்னம்பிள்ளைகள் போடப்பட்டுள்ளன, அவைகள் எந்த அளவிற்கு வளர்ந்து இருக்கின்றன ? இதை ஆரம்பத்திலேயே தடுக்காமல் அங்கேயிருக்கும் அதிகாரிகள் விட்டுவைத்ததற்கான நோக்கம் என்ன என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு செய்ததில் சர்வே எண் 0.53-ல் எட்டு ஏக்கரும், 0.20 சர்வே எண்ணில் எட்டு ஏக்கரும் என்று இருக்கிறது. பல ஆண்டுகாலமாக அவர்கள் அங்கே இருந்துகொண்டு இருக்கிறார்கள். செடில்மென்ட் செய்கிற நேரத்திலேயே எங்களுக்குச் சொந்தம் என்று வாதிட்டு இருக்கிறார்கள். செட்டில்மென்ட் அதிகாரிகள் அதை ஏற்கவில்லை. அதற்குப் பிறகு அவர்கள் சிவில் கோர்ட்டுக்குப் போய் இருக்கிறார்கள். ஆகவே, ஆக்கிரமிப்பு பல ஆண்டு காலத்திற்கு முன்பே செட்டில்மென்ட் வருவதற்கு முன்பே ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.